செ.வெ.எண்:55/மார்ச் நாள்: 25.03.2019

## இராமநாதபுரம் மாவட்டம்

## நாடாளுமன்ற மக்களவை பொதுத்தேர்தல்-2019-ல் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து ஒதுக்கீடு செய்வதற்காக கணினி மூலம் குலுக்கல் (Computerized Randomization)

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (25.03.2019) மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், அனைத்து கட்சி பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில், நாடாளுமன்ற மக்களவை பொதுத்தேர்தல் மற்றும் பரமக்குடி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பணிகளில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து ஒதுக்கீடு செய்வதற்காக கணினி மூலம் குலுக்கல் (Computerized Randomization) நடைபெற்றது.

நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தல்-2019 பணிகளுக்காக, இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்டு 302 வாக்குச்சாவடி மையங்களும், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்குட்பட்டு 346 வாக்குச்சாவடி மையங்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்டு 336 வாக்குச்சாவடி மையங்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்டு 383 வாக்குச்சாவடி மையங்களும் என மொத்தம் 1,367 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதேபோல, முதல்நிலை பரிசோதனை நிறைவேற்றப்பட்டு, 3,501 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 1,966 வாக்குச் செலுத்தும் இயந்திரங்களும், 2,154 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும் தயார் நிலையில் உள்ளன.

வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவு நாளன்று பயன்படுத்துவதற்காக, இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ள கணக்கீட்டின்படி, வாக்குச்சாவடி மையங்களின் எண்ணிக்கையிலிருந்து, வாக்குச்செலுத்தும் இயந்திரங்கள் (Ballot Unit) 20 சதவிதமும், வாக்குப்பதிவு இயந்திரம் (Control Unit) 17 சதவிதமும், வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரம் (VVPAT) 28 சதவிதமும் கூடுதலாக (Reserve) தயார் நிலையில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

அதன்படி, நாடாளுமன்ற மக்களவை பொதுத் தேர்தலில் பயன்படுத்துவதற்காக, பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கு 364 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 355 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 388 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கு 416 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 405 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 443 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும், இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கு 404 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 394 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 431 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும், முதுகுளத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு 460 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 449 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 491 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது.

அதேபோல, பரமக்குடி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பணிகளுக்காக அதே 302 வாக்குச்சாவடி மையங்களுக்கு, 364 வாக்குச்செலுத்தும் கருவிகளும், 355 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 388 வாக்காளர் சரிபார்க்கக்கூடிய இயந்திரங்களும் தேவை என கணக்கிடப்பட்டுள்ளது.

அதன்படி, இன்றைய தினம் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், அனைத்து கட்சி பிரதிநிதிகள் ஆகியோர் முன்னிலையில், நாடாளுமன்ற மக்களவை பொதுத்தேர்தல் மற்றும் பரமக்குடி சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் பணிகளுக்கு பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சட்டமன்ற தொகுதி வாரியாக பிரித்து ஒதுக்கீடு செய்வதற்காக கணினி மூலம் குலுக்கல் (Computerized Randomization) நடைபெற்றது.

இந்நிகழ்வின் போது, உதவி தேர்தல் அலுவலர்கள் (இராமநாதபுரம்) டாக்டர்.ஆர்.சுமன், (திருவாடானை) திரு.எம்.மதியழகன், (பரமக்குடி) திரு.எஸ்.ராமன், (முதுகுளத்தூர்) திருமதி.கயல்விழி உட்பட அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**